**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023 ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் நாள் திங்கள்கிழமை
**இடைக்கால மனு எண்.1/2023ன் அசல் வழக்கு எண். 145/2019**

1. மாணிக்கம்மாள்
2. சுசீலா
3. ஜீவா
4. தேவதாஸ்
5. தக்ஷணாமூர்த்தி
6. தண்டபானி ...மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

1. பூங்காவனம் (இறந்துவிட்டார்)
2. லட்சுமி
3. குமாரி
4. வசந்தா
5. பழனி
6. அமுதா
7. சித்ரா
8. வேண்டா
9. முருகன் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 19.04.2023ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. விவேகானந்தன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S. சங்கரபாண்டியன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தைக் கேட்டறிந்தும், கோப்புகளை பரிசீலனை செய்தும் இன்று, இதுகுறித்து இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் தாவாவினை திருத்தம் செய்யக் கோரும் மனுவினை அனுமதித்து உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

**2) மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் இவ்வழக்கில் வாதி. அசல் வழக்கில் தாவா சொத்து நத்தம் என்றும் தவறுதலாக

நஞ்சை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், முழு விஸ்தீரணம் குறிப்பிடப்படாமல் 100 சதுர மீட்டர் என்றும் குறிப்பிட்டுள்ளதாகவும், பட்டா எண் குறித்து குறிப்பிடப்படவில்லை என்றும், எனவே இது குறித்து பிராதில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி அளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>5ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 4 மற்றும் 6 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில், சொத்து விவரத்தில் கீழ்மட்டை கிராமத்தில் நஞ்சை சர்வே எண் 107/30-ல் 100 சதுர மீட்டர் என்பதை கிராம நத்த சர்வே எண் 107/30ல் 100 சதுர மீட்டர் என்று திருத்தம் செய்ய வேண்டும் என்று கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆனால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், இந்த வழக்கில் ஏற்கனவே எதிர்மனுதாரர்கள் தரப்பில் விளக்கமான எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் 107/30ல் 2 சென்ட் நிலம் வெள்ளைக்கண்ணு என்கிற நடேசன் என்பவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த விவரத்தை ஏற்கனவே எதிர்மனுதாரர்கள் தங்கள் தரப்பு எதிர் வழக்குரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளனர். மேலும் கிராம நத்த சர்வே எண் 107/30ல் எவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை உட்பிரிவு செய்யப்பட்டு, யார் யாருடைய பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதனையும், அதனடிப்படையில் யார் யார் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை யார் யார் அனுபவித்து வருகின்றனர் என்ற விவரத்தையும் எதிர் வழக்குரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளனர். அதனால் வாதிகளின் தாவாவே நிலைக்கத்தக்கது அல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டும், ஆனால் வாதிகளோ வேண்டும் என்றே இந்த வழக்கை தாக்கல் செய்து சொத்து குறித்து பரிகாரமும் கோரி தற்போது சொத்து விவரத்தையே திருத்த வேண்டும் என்று கோரி இந்த மனுவை தாக்கல் செய்திருப்பதால், இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், இதிலிருந்தே தாவா சொத்தினை வாதிகள் அனுபவிக்கவில்லை என்பது தெளிவாகிறது என்றும், எனவே மனுதாரரின் மனு எதிர்மனுதாரரின் செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தற்பொழுது தீர்மானம் செய்யவேண்டியது மனுதாரர்களின் மனு, அனுமதிக்கப்படக்கூடியதா? என்பதே ஆகும்.

5) இம்மனுவில், இருதரப்பிலும் சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்தில் திருத்தம் மேற்கொள்ள மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், இல்லையேல் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், வழக்கு சொத்து குறித்து முறையாக குறிப்பிட்டால்தான் உரிய தீர்வு பெற இயலும் என்றும், எனவே அதை அனுசரித்து தாவாவில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி அளிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

7) எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் தங்களது வாதத்தில் மனுதாரர்/வாதி வழக்கு விசாரணை நிலையில் மனுதாரர் தரப்பில் மனுக்கள் தாக்கல் செய்து வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்தி வருவதாகவும், மனுதாரருக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்பது பிரதிவாதி தரப்பில் எதிர்கட்சி என்றும், மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எந்தவிதமான காரணமும் காலதாமதத்திற்கு கூறப்படவில்லை என்றும், எனவே இம்மனு அனுமதிக்கப் படக்கூடாது என்றும், இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டுள்ளார்.

8) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. கோப்புகள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

9) <u>தீர்வு</u>

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது தாவாவில் திருத்தம் மேற்கொள்ள அனுமதியளிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுவில் எவ்விதமான காரணங்களும் குறிப்பிடப்படாமல் உள்ளது. எனவே இம்மனுவினை செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு கூறப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 04.01.2023 அன்று எதிர்மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். பின்னர் நீதிமன்றத்தால் எழுவினாக்கள் வனையப்பட்டு வழக்கு விசாரணைக்கு உள்ள நிலையில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். வழக்கு விஸ்தீரணம் குறித்து முழுமையாக பிராதில் குறிப்பிடப்பட்டால்தான் வழக்கு தரப்பினர் கோரும் பரிகாரம் குறித்து பரிசீலிக்க இயலும்.

10. மேலும் மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனு அனுமதிக்கப்பட்டால்தான் இவ்வழக்கு பிரச்சனை குறித்து முழுமையான தீர்வு ஏற்படும். இல்லையேல் வழக்கு பல்கிப் பெருகும் வாய்ப்புள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்பது மட்டுமே ஆட்சேபனையாக உள்ள நிலையில் எதிர்மனுதாரர்களின் ஆட்சேபனையானது வழக்கு விசாரணையின் போது தீர்க்கப்படவேண்டியது. எனவே வழக்கில் முழு தீர்வு காண வேண்டி மனுதாரரின் இம்மனுவினை நீதியின் நலன்பால் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு. காண்கிறது. மேலும் மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை காலதாமதமாக தாக்கல் செய்து எதிர் மனுதாரர்களை அலைகழிக்கிறார் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ள வாதம் ஏற்புடையதாக உள்ளது. எனவே இம்மனுவின் செலவுத்தொகையை 1ம் எதிர்மனுதாரருக்கு, மனுதாரர்/வாதி செலுத்த கடமைப்பட்டவராகிறார். எனவே மனுதாரர்/வாதி இம்மனுவின் செலவுத் தொகையை 1ம் எதிர்மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு மனுதாரர்/வாதி 1ம் எதிர்மனுதாரருக்கு இம்மனுவின் செலவுத் தொகையை செலுத்த வேண்டும் என்ற உத்தரவோடு மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> :-

-இல்லை-

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> :-

-இல்லை-

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.